# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 346/மா/2025

நாள்:30.06.2026

க. சுரேஷ் பாபு
சென்னை–600 044 --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 044, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, எண்.13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.க.சுரேஷ் பாபு என்பவரின் 03.09.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.09.2025 அன்று பெறப்பட்டு 346/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 044, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, எண்.13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.க.சுரேஷ் பாபு என்பவர் தனது 03.09.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் எண்.1 எல்லைக்குட்பட்ட, பம்மல், நாகல்கேணி, காந்தி நகர் முற்றிலும் (D.D.T.P. L.P.DM No.254/72 & 171/72 அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவுகள் கொண்ட பகுதிகளாகும். இப்பகுதியில் அமைந்துள்ள (D.D.T.P. L.P.DM No.254/72 & 171/72 அங்கீகரிக்கப்பட்ட மனை எண் 35 அசல் அளவு 3566 சதுர அடிகள் ஆகும்.

இந்த மனையில் அசல் அளவில் இருந்து 2224 சதுர அடி நிலத்தினை கடந்த 2006 ஆம் ஆண்டு, ஆவண எண்.4406/2006ன் மூலம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்த 2224 சதுர அடி மனையினை 2006–ல் கிரையம் பெற்ற நபரால், கடந்த 2019 ஆம் ஆண்டு ஆவண எண் 6264/2019 மூலம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த 2224 சதுர அடி மனை வருவாய் துறையின் கீழ் பழைய புல எண் 103/50, தற்போது புதிய TOWN SURVEY எண் 3, BLOCK NO.15, WARD-J என தாக்கல் ஆகி இருந்த வந்தது.

இந்நிலையில் இந்த 2224 சதுர அடி மனையினை கடந்த 2023 ஆம் ஆண்டு, 1053 சதுர அடி நிலத்தினை ஆவண எண் 281/2023 மூலம் திருமதி.மதீனா பானு, க/பெ.சையது அலி என்பவரும், மீதமுள்ள 1171 சதுர அடி நிலத்தினை ஆவண எண் 8851/2023 மூலம் திருமதி அஸ்மத்துன்னிசா பீபி என்பவரும் கிரையம் பெற்றுள்ளனர். இதில் 1053 சதுர அடி

நிலத்தினை கிரையம் பெற்றுள்ள திருமதி மதீனா பானு அவர்கள் தனக்கு சொந்தமான ஆவணம், பழைய புல எண் 103/50, TOWN SURVEY எண் 3, SUB DIVISION 2, BLOCK NO.15, WARD-J நிலத்தில் மட்டுமல்லாமல் பழைய புல எண் 103/53, 102/150, TOWN SURVEY எண் 5, BLOCK NO.15, WARD-J, சுமார் 784 சதுர அடி நிலம் பொதுப் பாதை (தெருவில்) மலம் மக்கல் தொட்டி (SEPTICK TANK) கட்டுமானம் கட்டுதல் தொடர்பாக பூமி பூஜை நிலையில் புகார் மனு செய்துள்ளேன். கிரக பிரவேசம் முடிந்து ஏறிவிட்ட நிலையிலும், தற்பொழுது மலம் மக்கல் தொட்டி பயன்பாட்டுக்கு வந்து விட்டது.

சுயலாபம் அடைந்து கொண்டு, எனது புகார் மனு மீது இது நாள் வரை எந்த வித நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர்.

ஆகவே மதிப்பு மிகுந்த முறைமன்ற நடுவர் அவர்கள், இந்த புகார் மனு மீது உரிய விசாரணை செய்து, புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி நிர்வாக அலுவலர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியும் மேலும் பொதுப் பாதையில் திட்டமிட்டு ஆக்கிரமித்து உள்ள கட்டுமானத்தை அகற்றக் கோரியும் மற்றும் நிலத்தை மீட்டெடுக்க உத்தரவிட கோரியும், இந்த மனு தங்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 17.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 12.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது 11.06.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 1476/2025/எப்1–ம1 –ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ அறிவிப்புடன் இணைத்து வரப்பெற்ற திரு. க. சுரேஷ்பாபு என்பவரின் புகார் மனுவில் பம்மல் ராமநாதன் தெருவில் வார்டு J, பிளாக் 15, நகரளவு எண் 5, சர்வே எண் 103/53, 102/150–ல் அனுமதி பெற்ற மனைப்பிரிவு சாலையில் திருமதி மதினாபானு, க/பெ சையத் அலி என்பவர் Septic Tank கட்டுமானம் கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளது.

மேற்படி புகாரின் மீது உரிய நேராய்வு செய்யப்பட்டு சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட திருமதி மதினாபானு, க/பெ சையத் அலி என்பவருக்கு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 128(1)–ன் கீழ் ஆக்கிரமிப்பு அகற்ற பிறப்பிக்கப்படும் அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.''

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 12.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 1 எல்லைக்குட்பட்ட, பம்மல் நாகல்கேணி, காந்தி நகரில் அமைந்துள்ள DDTP LPDM No.254/72 & 171/72 மனை எண்.35 அசல் அளவு 2224 சதுரடியாகும்.

இந்த மனையில் இருந்து 2224 சதுரடி நிலத்தினை கடந்த 2006–ஆம் ஆண்டு, ஆவண எண்.4406/2006 மூலம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கிரையம் பெற்ற நபரால் கடந்த 2019–ஆம் ஆண்டு ஆவண எண்.6264/2019 மூலம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதில் பழைய புல எண்.103/50 தற்போது புதிய சர்வே எண்.3,

பிளாக் 15, வார்டு J ல் அமைந்துள்ள 1053 சதுரடி நிலத்தினை திருமதி.மதீனா பானு க/பெ.சையது அலி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் தற்போது மேற்காணும் திருமதி.மதீனா பானு கடந்த 28.10.2024ல் ஆவண எண்.9014/2024ன் மூலம் திருமதி.நதீம்பேக் அஸ்லம் / ஷாஜீயாபேகம் அவர்களுக்கு கிரையம் செய்துக் கொடுத்துள்ளார். இந்நிலையில் வீட்டின் உரிமையாளர் அரசுக்கு சொந்தமான சுமார் 784 சதுரடி நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து (Septic Tank) கட்டியுள்ளார்.

இது குறித்து மனு அளித்தும், தாம்பரம் மாநகராட்சி அலுவலர்கள் ஆக்கிரமிப்பினை அகற்றவில்லை. எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்பினை உடனடியாக அகற்றுமாறும், ஆக்கிரமிப்பினை அகற்றாத தாம்பரம் மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் 12.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை பம்மல், காந்தி நகர், நாகல்கேணி, இராமநாதன் தெருவில் உள்ள புல எண், பழைய புல எண்.103/50 தற்போது புதிய சர்வே எண்.3 மனை எண்.35ல் கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை கண்டறியப்பட்டு வீட்டின் உரிமையாளருக்கு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 128 (1)–இன் கீழ் அகற்ற பிறப்பிக்கப்படும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி தாம்பரம் மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை தாக்கீது வழங்கியும் வீட்டின் உரிமையாளர், ஆக்கிரமிப்பை அகற்றப்படாத நிலையில் தாம்பரம் மாநகராட்சியால் ஒரு வார கால அவகாசத்தில், மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7 முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

''செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 1 எல்லைக்குட்பட்ட, பம்மல் நாகல்கேணி, காந்தி நகரில் 2224 சதுரடி கொண்ட மனை எண் 35–னை 2006–ஆம் ஆண்டு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், கிரையம் பெற்ற நபரால் 2019–ஆம் ஆண்டில் மேற்கண்ட 2224 சதுரடி நிலத்தில், பழைய புல எண்.103/50 தற்போது புதிய சர்வே எண்.3, பிளாக் 15, வார்டு J ல் அமைந்துள்ள 1053 சதுரடி நிலத்தினை திருமதி.மதீனா பானு க/பெ.சையது அலி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்பதும், அதில் தற்போது மேற்காணும் திருமதி.மதீனா பானு கடந்த 28.10.2024ல் திருமதி.நதீம்பேக் அஸ்லம் / ஷாஜீயாபேகம் அவர்களுக்கு கிரையம் செய்துள்ளார் என்பதும், இந்நிலையில் வீட்டின் உரிமையாளர் அரசுக்கு சொந்தமான சுமார் 784 சதுரடி நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து (Septic Tank) கட்டியுள்ளதால், இதுகுறித்து தாம்பரம் மாநகராட்சிக்கு மனு அளித்தும், மேற்கண்ட ஆக்கிரமிப்பினை மாநகராட்சியால் அகற்றாததால், இவ்வாக்கிரமிப்பினை உடனடியாக அகற்றுமாறும் மற்றும் அவ்வாறு அகற்றாத தாம்பரம் மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை பம்மல், காந்தி நகர், நாகல்கேணி, இராமநாதன் தெருவில் உள்ள புல எண், பழைய புல எண்.103/50 தற்போது புதிய சர்வே எண்.3 மனை எண்.35ல் உள்ள கட்டிடத்தை கள ஆய்வு செய்ததில், சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது கண்டறியப்பட்டு, அவ்வாக்கிரப்பினை அகற்ற வீட்டின் உரிமையாளருக்கு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 128 (1)–இன் கீழ் தாக்கீது வழங்கப்பட்டும், வீட்டின் உரிமையாளர் இதுவரை அவ்வாக்கிரமிப்பினை அகற்றாததால், ஒருவார கால அவகாசத்தில் மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மேற்கண்ட பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி தாம்பரம் மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள, சென்னை, பம்மல், காந்தி நகர், நாகல்கேணி, இராமநாதன் தெருவில் உள்ள பழைய புல எண்.103/50 தற்போது புதிய சர்வே எண்.3 மனை எண்.35ல் உள்ள கட்டிடத்தின் கள ஆய்வில், சாலையில் ஆக்கிரமிப்பு உள்ளதை கண்டறியப்பட்டதால், அதனை அகற்ற வீட்டின் உரிமையாளருக்கு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 128 (1)–இன் கீழ் தாக்கீது வழங்கப்பட்டும், அவ்வாக்கிரமிப்பினை அகற்றாததால், ஒருவார கால அவகாசத்தில் அதனை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தாம்பரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு உரிய தொடர் நடவடிக்கையினை ஒரு வார காலத்திற்குள் மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.க.சுரேஷ் பாபு,
எண் 13 துரைராஜ் தெரு,காந்தி நகர், நாகல் கேணி,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

(2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

1/7/26
செயலாளர்.

1/7/26

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032